9th September 1958]

Sri P. G. MANICKAM : ஹரிஜனங்கள் கிணறு வெட்டும் காண்ட்ராக்ட்கள் எடுக்க அநேகமாக முன்வருகிறதில்லை. அதற்குக் காரணம் இந்த வேலையில் சாதாரணமாக லாபம் வருவதில்லை. நஷ்டம் தான் வருகிறது. ஆகவே, கண்ட்ராக்டர்களுக்கு, ஹரிஜனங்களுக்கு கிணறு வெட்டு வதையும் எடுத்துக்கொண்டால் தான் காண்ட்ராக்ட் கொடுக்கப்படும் என்ற ஒரு நிபந்தனையைப் போட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நிபந்தனை ஒன்றும் ஏற்படுத்துவது உசிதமில்லை. மற்ற விஷயங்களையும் ஆலோசித்து ஹரிஜனங்களுக்கு கொடுக்க முடியுமா என்றுதான் யோசிக்க முடியும்.

Sri K. B. S. MANI : சர்க்கார் பல துறைகளிலும், வெல்பேர் டிபார்ட் மெண்டு, ரூரல் வெல்பேர் வேலைக்காக கிணறுகள் அதிகமாக வெட்டப்படுகின்றன, தஞ்சை ஜில்லாவில். அதன் பிறகு, தண்ணீர் கிண்டிக்கு அனுப்பப்படுகிறது. ஆறு மாதம், ஒரு வருடம் கழித்து காலதாமதமாகி ரிஸல்ட் வருகிறது. அதிலிருந்து உப்புத் தண்ணீராக இருப்பதாக ஏற்படுகிறது. இதனால், பணமும் விரயமாகிறது, நேரமும் விரயமாகிறது. சாதாரணமாக எத்தனை கிணறுகள் இம்மாதிரி கைவிடப்பட்டன என்று தெரியுமா ? அதைத் தவிர்க்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தக் கேள்வியில் அது எப்படி வருகிறது ? தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri A. R. MARIMUTHU : ஹரிஜனங்களுக்கு நிலங்கள் கிடைக்காத காரணத்தால் கிணறுகள் வெட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே துரிதமாக நிலங்களை அக்வயர் பண்ணி கிணறு வெட்ட துரிதமாக ஏற்பாடுகள் செய்வார்களா ? விதிப்படி அக்வயர் பண்ணக் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே விதியைத் திருத்தி அமைத்து துரிதமாக வேலை நடக்க ஏற்பாடுசெய்ய சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : துரிதமாகத்தான் இப்பொழுது செய்கிறோம். இன்னும் அதிக துரிதமாகச் செய்ய என்ன செய்யலாம் என்று அரசாங்கம் யோசிக்கும்.

Small-pox.

* 89 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1–10–1957 முதல் 25–3–1958 வரை பெரியம்மையால் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன (முனிசிபல் ஏரியா வாரியாக, பஞ்சாயத்து ஏரியாவாரியாக)?

(ஆ) அவர்களில்—

(1) ஆண்கள்.
(2) பெண்கள்.
(3) குழந்தைகள், எத்தனை பேர் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) & (ஆ) 1957 அக்டோபர் ஒண்ணும் தேதி முதல், 1958 மார்ச் 31-ம் தேதிவரை இந்த ராஜ்யத்தில் வைசூரியால் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் ஸ்டேட்மெண்டு[a] சபையின் மேசை மீது வைக்கப்பட்டிருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN : ஆறு மாத காலத்திலே 3,876 பேர்கள் இறந்து இருப்பதாகவும், அதில் 2,126 பேர்கள் குழந்தைகள் என்றும் இந்த ஸ்டேட்மெண்டில் காணப்படுகிறது. ஆகவே இதற்குக் காரணம் என்ன ? போதிய உணவு இல்லாத காரணமா அல்லது, குடி தண்ணீர் சரியாக இல்லாத காரணமா என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த வைசூரி நோய் ஐந்தாறு வருஷங்களுக்கு ஒரு தடவை வருகிறது. முன்னால் 1950–51ல் வந்தது. பிறகு, 1957–58ல் வந்தது. இப்பொழுது கொஞ்சம்

---

[a] Printed as Appendix I on page 481 infra.

அதிகமாக இருக்கிறது. " Periodicity " என்ற அந்த வகையில், ஒரு ஸைக்கிள் மாதிரி ஐந்தாறு வருஷத்திற்கு ஒரு தரம் வருகிறது. அவ்வளவுதான்.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இந்த வியாதி அநேகமாக வெய்யில் காலத்தில்தான் வருகிறது என்பது வாஸ்தவம் தான். அப்படியானால் அதற்கு உஷ்ணம் காரணமாக இருக்கிறது என்பதை அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது சாதாரணமாக குழந்தைகளுக்குக் கூட தெரியும். வெய்யில் காலத்தில்தான் அது வரும் என்று.

SRI M. JAGANNATHAN : In view of the fact that small-pox has taken a heavy toll of human lives, may I know why the medical authorities concerned failed to take adequate preventive measures?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir. As soon as they come to know of any infection, they at once take all prophylactic action in those cases. In certain cases, information about the attack is not disclosed. So, the authorities concerned are not aware of the same. But, as soon as they are aware of the infection, they take all precautions. That is why we are able to control it. For instance, I may tell the hon. Member that about 1,511,170 primary vaccinations and 1,419,799 re-vaccinations were done during the present epidemic period up to 1st March 1958. This shows that as soon as they come to know of the infection, they take all necessary precautions.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், குறிப்பிட்ட வருஷத்தில் மொத்தம் எத்தனை குழந்தைகள் பிறந்திருக்கின்றன. சட்ட ரீதியாக குழந்தைகள் பிறந்த ஆறு மாதங்களுக்குள் அவைகளுக்கு அம்மை குத்த வேண்டும் என்று இருக்கிறது. அப்படி அந்தக் குழந்தைகளுக்கு அம்மை குத்தப்பட்டிருக்கின்றனவா, எத்தனை குழந்தைகளுக்கு அம்மை குத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இதைப்பற்றி தனியாக கேள்வி போடுங்கள். அதன் பிறகு அதற்கு பதில் சொல்ல முடியும்.

Disposal of appeals

* 93 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any time-limit for the disposal of appeals against the order of appointment of village officers—

(i) by Revenue Divisional Officers to District Collectors and (ii) against those of District Collectors to the Board of Revenue; and

(*b*) whether there is any time-limit within which orders should be passed from the date of hearing of such appeals?

THE HON. SRI M. A. MANICKAVELU : (i) & (ii) No.